# ஈழத்தின் கலை இலக்கிய வளர்ச்சியில் அமலமரித்தியாகிகள்

**திரு. யோ. யோண்சன் ராஜ்குமார்**
BA, PGDE, M.Ed (Jaffna)
ஆசிரிய ஆலோசகர்,
யாழ். வலயம், யாழ்ப்பாணம்.

அமலமரித் தியாகிகளின் சட்டக்கோவையும் அதன் ஒழுங்குகளும் அங்கீகரிக்கப்பட்டதன் 200ஆவது ஆண்டினை கொண்டாடும் இக்காலத்தில் இலங்கையில் அவர்கள் ஆற்றிய பல்வேறு பணிகளை ஆய்வு செய்வது பொருத்தமானது. அமலமரித் தியாகிகள் இலங்கை மண்ணிற்கு வருகை தந்து கல்விப்பணி, மறை அறிவிப்புப்பணி, மானிட உருவாக்கப்பணி, ஆன்மிகப்பணி, சமூகமேம்பாட்டுப்பணி எனப் பலநூறு பணிகளை ஆற்றியவர்கள். சிறப்பாக ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் சிதைந்திருந்த கத்தோலிக்கத் திரு அவையை செம்மையாக்கும் மாபெரும் பணிகளை ஆற்றியவர்கள். இப்பணிகளை பலரும் அறிவார்கள் எனினும் ஆன்மிகத்தோடு மட்டும் நின்றுவிடாது பல்வேறு கலை இலக்கியங்கள் மூலமாக மறையினதும், மண்ணினதும் பண்பாட்டிற்கு அணி சேர்த்துள்ளார்கள். இந்தக் கட்டுரை அவர்களில் சிலர் அளித்த கலை இலக்கிய பணிகளை அறிமுகம் செய்ய முற்படுகின்றது.

இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்க மதம் அறிமுகஞ் செய்யப்பட்டது. அம்மதத்தினை தொடர்ந்தும் ஆழமானதாகப் பரப்பிடவும் மக்களுடன் நேரடி உறவுகளைப் பேணுவதற்காகவும் கத்தோலிக்க மிஷனரிகள் கொண்டுவரப்பட்டனர். ஆரம்ப காலத்தில், இங்கு வருகை தந்த யேசு சபை, பிரான்சீஸ்கன் சபை போன்றவையும் ஒல்லாந்தர் காலத்தில் இங்குவந்து பணிபுரிந்த ஒறற்றோறியன் சபையினரும் கத்தோலிக்க மறையைப் பரப்புவதில் முன்னின்று உழைத்தனர். அவர்கள் மறையை ஆழமாக மக்கள் மத்தியில் கொண்டு செல்லு வதற்கு பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றியது மட்டுமன்றி கலை இலக்கியத் துறைகளையும் பயன்படுத்தினர். ஆரம்ப

காலத்தில் தாம் கொண்டுவந்த மரபுகளை பயன்படுத்தினாலும் காலப்போக்கில் இங்கிருந்த சுதேச இலக்கியங்களையும் கலை வடிவங்களையும் பயன்படுத்தினர். அவர்களின் முயற்சிகள் கலை இலக்கியங்களில் செல்வாக்கு செலுத்தியது மட்டுமன்றி அக்கலை இலக்கியங்களை வளர்த்ததும் குறிப்பிடத்தக்கது. அதனால் இலங்கையில் கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியமொன்று உருவாகியது.

ஆனால் ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மதச் சுதந்திரம் பறிக்கப்பட்டு கத்தோலிக்கர்கள் துன்புறுத்தப் பட்டார்கள். குருக்கள் கொல்லப்பட்டும், விரட்டி அடிக்கப்பட்டும் கத்தோலிக்கமே இல்லை என்கின்ற அளவுக்கு அது அழிக்கப்பட்டது. ஆனால் ஒறற்றோறியன் சபையைச் சேர்ந்த புனித யோசவ்வாஸ் முனிவர் இலங்கைக்கு வந்து மக்களை மீள் எழுச்சி கொள்ளச் செய்தார். அதனால் கத்தோலிக்கம் காப்பாற்றப்பட்டது. யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகள் போன்றவர்கள் மக்களை கலை இலக்கியங்கள் வழியாக ஆன்மிகபலம் பெறச் செய்தனர். ஆங்கிலேயர் காலத்தில் மதச்சுதந்திரம் வழங்கப்பட்ட போது ஏனைய புரட்டஸ்தாந்து மிக்ஷனரிகளின் அளவுக்கு கத்தோலிக்கம் இயங்கமுடியாத சவாலுடன் சிரமப்பட்ட காலத்தில், மீளவும் ஒரு எழுச்சி மட்டுமன்றி கல்வி நடவடிக்கைகளிலும் பாரிய வேலைகள் மேற்கொள்ள வேண்டிய தேவை வேண்டி, எமது நாட்டின் கத்தோலிக்கம் காத்துக்கிடந்தது. அக்காலத்தில்தான் ஆயர் பெற்றாக்கினி அவர்கள் அமலமரித் தியாகிகளின் ஸ்தாபகர் யூஜின் டி மசனற் அவர்களுக்கு குருக்களின் தேவை வேண்டி நேரில் சந்தித்து விண்ணப்பம் செய்தார். அவரது சந்திப்பின் பலன் ஆயர் பெற்றாக்கினியின் காலத்தில் 1847 இல் அனுகூலமானது. ஒல்லாந்தர் காலத்தில் சிதைந்து போயிருந்த திரு அவையை மீளுயிர்ப்புச் செய்யவும், கல்வியின் கண்களைத் திறக்கவும், ஆன்மிகத்தினை ஆழப்படுத்தவும், இலங்கைக்கு வந்து சேர்ந்தவர்கள்தான் அமலமரித்தியாகிகள். இங்கே கல்விச்சாலைகளை கட்டி எழுப்பியது முதல், சிறந்த பிரசங்கிகளாக மக்களின் மறைவாழ்வினை ஒழுங்குபடுத்தியும்,

மகா ஞானொடுக்கங்கள் மூலமாக ஆன்மீக நலன்களை மேம்படுத்தியும், பங்குத்திரு அவைகளை ஒழுங்குபடுத்தி, உலகப் பொதுவான கத்தோலிக்க திருமறையின் முறைமைகளுக்கு மக்களை பயிற்றுவித்தும் அவர்கள் ஆற்றிய பணிகள் சொல்லில் அடங்காதவை. அப்பணிகளுடன் இரண்டறக் கலந்தவைகளாகவே கலை இலக்கியப் பணிகளும் காணப்பட்டன. தனியே அமலமரித் தியாகிகளின் கலை இலக்கியப்பணிகளை ஆய்வு செய்வதென்பதே மாபெரும் ஆய்வுப் பணியாகும். நூற்றுக்கணக்கான அமலமரித்தியாகிகள் இம்மண்ணிலே ஆற்றிய பணிகளை ஆய்வு செய்வது சாத்தியமானதல்ல. அவ்வாறான பெரும் ஆய்வுகளுக்கு களந்திறக்கும் ஒன்றாகவும், அவர்களின் பெரும் கலை இலக்கியப்பணிகளின் பதச்சோறாக அமையத்தக்க இக்கட்டுரை, ஆசிரியரின் அறிமுறை எல்லைக்குள் அமைந்த சில கலை இலக்கிய ஆளுமைகளைப் பற்றி மட்டுமே இக்கட்டுரை பேசுகின்றது.

1. **தமிழில் இலக்கியம் படைத்த ஐரோப்பிய அமலமரித்தியாகி - லூயிஸ் டெய்சி அடிகள்**

தமிழின் பெருமையை உலகறியச் செய்ததிலும், தமிழில் ஆய்வுப் புலத்தினை ஆரம்பித்து வைத்தல், உரைநடை இலக்கியத்தினை அறிமுகம் செய்தல், அகராதி முறைமையை அறிமுகம் செய்தல், தமிழ் படைப்புக்களை பிறமொழியில் மொழிபெயர்த்தல் என தமிழ் கலை இலக்கியத்தின் வளர்ச்சியில் பல ஐரோப்பிய குருமாரின் பங்களிப்பு இருந்துள்ளமையை நாம் அறிவோம். வீரமாமுனிவர், கார்ட்டுவல் அடிகள் எனப் பலர் தமிழகத்திற்கு வந்து, தமிழ்க் கற்று, தமிழ் மொழியிலே இலக்கியம் படைத்தமையானது தமிழின் வளர்ச்சிக்கு அனுகூலமாக இருந்தமையை நாம் அறிவோம்.

அந்த வகையில் இலங்கையிலும் மறை பணியாற்றிய பல அமலமரித்தியாகிகளும் தமிழ் படித்து தமிழில் பிரசங்கம், திருப்பலி என்பவற்றினை நிறைவேற்றியது மட்டுமன்றி கலை இலக்கியங்களையும் படைத்தனர். அவர்களில் பெல்ஜியத்தில்

இருந்து இலங்கைக்கு வந்து குருவாக பணியாற்றியது மட்டுமன்றி, தமிழ் கற்று தமிழில் இலக்கியம் படைத்த ஒருவராக அருட்திரு லூயிஸ் டெய்சி, அமதி அடிகளார் திகழ்ந்துள்ளார்கள். அவரது கலை இலக்கியப் பணிகள் விதந்துரைக்கத்தக்கவை

**பணியும் பண்பும்**

அருட்திரு லூயிஸ் டெய்சி அடிகளார் பெல்ஜியத்திலுள்ள புறூசெல்ஸ் என்னும் இடத்திலுள்ள நமோர் என்னும் கிராமத்தில் 1898 கார்த்திகை மாதம் ஐந்தாம் திகதி பிறந்தவர். அவரது குடும்பம் இறை பக்தியுள்ள குடும்பம் மட்டுமன்றி கலை இலக்கியச் செயற்பாடுகளிலும் ஆர்வங் கொண்ட குடும்பம். இவரது மூத்த சகோதரன் புனித ஆசீர்வாதப்பர் சபையில் சேர்ந்து குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர். இவரது தாய் மாமனார் மற்றும் மைத்துனர்கள் இருவரும் மறைமாவட்டக் குருக்களாக பணிபுரிந்தவர்கள். இத்தகைய பின்னணியில் இவரும் அமலமரித்தியாகிகள் சபையில் இணைந்து கற்று தியாக்கோன் நிலைக்கு உயர்த்தப்பட்டபின். ஏழு அமலமரித்தியாகிகளுடன் இலங்கைக்கு வந்தார். 1924 ஆம் ஆண்டு இலங்கையில் ஆயராக இருந்த கியோமர் ஆண்டகை அவர்களினால் யாழ் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1924–1926 வரை இளவாலைப் பங்குத்தந்தையாக இருந்த இவர் அங்கு இருக்கும்போது தமிழை முறையாகக் கற்றார். எழுதவும் வாசிக்கவும், முறையாகப் பிரசங்கங்கள் செய்யவும் கற்றுக்கொண்டார். மூன்று தடவைகள் சில்லாலைப் பங்கின் பங்குத் தந்தையாக இருந்த அவர் சில்லாலை மக்களால் மிகவும் போற்றப்பட்டார். அதுமட்டுமன்றி வவுனியா இறம்பைக்குளம், நெடுந்தீவு, ஆனைக்கோட்டை, இளவாலை என பல பங்குகளிலும் பணியாற்றி இறுதியில் கொழும்புத்துறை அமல உற்பவ முதுகுரவர் இல்லத்தில் தனது ஒய்வுக் காலத்தினை ஆன்மீகத்தில் செலவிட்டு 25.11.1979 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் யாழ் மரியன்னை சேமக்காலையிலேயே புதைக்கப்பட்டது.

இவ்வாறு பெல்ஜியத்தில் பிறந்தாலும் தனது குருத்துவக்காலம் முழுவதையும் இலங்கையில் செலவிட்டு ஒரு தமிழனாகவே வாழ்ந்து இங்கேயே மரணித்துப்போன அருட்தந்தை டெய்சி அவர்களின் பணி போற்றுதற்குரியதாகும்.

**கலை இலக்கியப் படைப்பாளி**

அருட்தந்தை டெய்சி அவர்கள் பன்முக ஆற்றல் கொண்டவர். மிகச்சிறந்த கலைஞர், சிறுகதை, நாவல், நாடகம் போன்ற இலக்கியங்களைப் படைத்தது மட்டுமன்றி சிறப்பான மறை உரைஞராகவும், சிறந்த கட்டடக் கலைஞராகவும் விளங்கினார். இவரிடம் இருந்த பிரான்சிய, ஆங்கில, இலத்தீன், ஒல்லாந்து, தமிழ் போன்ற பல மொழி ஆற்றல் இவரது படைப்புக்களில் செல்வாக்குச் செலுத்தியது.

**கட்டடக்கலைஞன்**

இவர் சிறந்த கட்டடக்கலைஞனாக விளங்கியது மட்டுமன்றி தான் பணிசெய்த பெரும்பாலான இடங்களில் தனது நினைவுச் சின்னங்களாக பல கட்டடங்களை விட்டுச் சென்றுள்ளார். சில்லாலை 'புனித கதிரைமாதா' ஆலயம் இவரது கட்டடக்கலையின் ஆளுமைக்கு சிகரம் வைத்தது போன்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது. தூண்கள் இல்லாது ஏழு வில் வடிவ தாங்கிகளுடன் கட்டப்பட்டுள்ள இவ்வாலயத்தின் கலை நுட்பமானது ஆச்சரியமும் சிறப்பு மிக்கதுமாகும். அதே நுட்பத்தினை அவர் நாவாந்துறை பரலோக மாதா ஆலயத்திலும் கையாண்டுள்ளார். அதுமட்டுமன்றி சில்லாலையில் உள்ள பாடசாலை, கன்னியர் மடம் என்பவையும் அவரால் கட்டப்பட்டவை. சில்லாலை சந்தியோகுமையோர் ஆலயத்துக்கான அடிப்படையான பணிகளையும் இவரே ஆரம்பித்தார். கட்டடங்களைக்கட்டும் போது பங்கு மக்களை சிரமதானப் பணிகள் மூலமாக இணைத்து செயற்பாடுகளைச் சாத்தியப்படுத்தினார். அதுமட்டுமன்றி அவரது 'மரணித்தவள் மகள்' என்ற சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டபோது அந்நூலினை விற்று வரும் வருமானத்தில் அரைவாசிப்பகுதி

கதிரைமாதா ஆலய கட்டடப்பணிகளுக்கும், அரைவாசிப்பகுதி சந்தியோகுமையோர் ஆலய கட்டடப் பணிகளுக்கும் செலவழிக்கப்படுமென நூலில் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறான பல்வேறு முயற்சிகளுக்கூடாக பல்வேறு கட்டடங்களை ஆக்கிய இவரின் கட்டடக் கலை ஆர்வமும் ஆளுமையும் காலத்தால் மறக்கக்கூடியதல்ல.

**இலக்கியப் பணிகள்**

மொழியாளுமையைச் சிறப்பாக கொண்டிருந்த அருட்தந்தை அவர்கள் தமிழில் நாவல், சிறுகதை, நாடகம் போன்றவற்றை எழுதியுள்ளார். ‘பிரசங்கியாத பிரசங்கம்’, தனியே நாவலாகவும், ‘தனிநாயகம்’, ‘நானே குற்றவாளி’ என்பவை தனித்தனி நாடக நூல்களாகவும், வெளியிடப்பட்டிருப்பதுடன் ‘மரணித்தவள் மகள்’ என்ற நூற் தொகுப்பில் ‘மரணித்தவள் மகள்’ ‘போலி மோதிரம்’, ‘போலிப்பிசாசு’ ஆகிய சிறுகதைகளும், ‘அருளும் கறுப்பனும்’ என்ற குறுநாடகமும் இணைக்கப்பட்டுள்ளன.

**நாவல்**

இவர் எழுதிய குறு நாவலாக ‘பிரசங்கியாத பிரசங்கம்’ காணப்படுகின்றது. ஞானப்பிரகாசம் எனப்படும் குருவானவர் கூலைத்தீவு என்னும் கிராமத்தில் ஏழு ஆண்டுகளாக வேதபரிபாலனம் செய்கின்றார். தான் பரிபாலனம் செய்த கிராமத்தில் இருந்து இறந்தவர்கள் முடிவில்லா வாழ்வில் எங்கு இருப்பார்கள் என்பதனை அறியும் அவா இவரில் அடிக்கடி ஏற்பட, அவரது தியானத்தில் அவர் மேலுலகம் சென்று திரும்புகின்றார். அது அவரில் பாரிய அதிர்ச்சியை ஏற்படுத்த அவர் பதட்டத்துடன் தான் கண்டவற்றை எழுதி வைத்து விட்டு இறந்து விடுகின்றார். அவர் எழுதியதில் இருந்து அவர் மோட்சம், உத்தரிப்பு ஸ்தலம், நரகம் ஆகியவற்றிற்கு பயணஞ் செய்வதாகவும் அங்கு அவை எவ்வாறு இருந்தன என்பதனையும் அவரது பங்கினைச் சேர்ந்த யார் யார் இருக்கின்றார்கள் எனவும் அறிந்து கொள்ளுகின்றார். இருவர் மட்டுமே மோட்சத்திலும், ஓரிருவர்

உத்தரிப்புஸ்தலத்திலும், பலர் நரகத்திலும் இருப்பதனை கண்டு மனவேதனை அடைகின்றார். அவர்காணும் ஒவ்வொருவரும் வாழும் போது செய்த நன்மை தீமையான சம்பவங்கள் குருவானவரின் மனக்கண்முன் வந்து போகின்றன. கற்பு நெறிப்பிறழ்வு, பொருளாசை, சாதிப்பாகுபாடு, களவு, நாஸ்திக கொள்கைகள், பிறர் சிநேகமற்ற தன்மைகள், ஊதாரித்தனம், தற்பெருமை, அரசியல் மோசடி போன்ற பலவும் பலரை நரகத்தில் வீழ்த்தியுள்ளதனை அவரரவர் வாழ்வினுாடாக ஆசிரியர் நாவல் மூலமாக இனங்காட்டுகின்றார். இந்நாவலில் ஆசிரிருக்கு தமிழ் பாரம்பரியத்தோடு இருந்த ஒட்டுறவு மிகச்சிறப்பாக வெளிக்கொணரப்படுகின்றது. தமிழ் மக்களிடம் இருந்த ஒருவனுக்கொருத்தி, விருந்தோம்பல் போன்ற நல்ல பண்புகளைப் பாராட்டும் இவர், தமிழ் மக்கள் மத்தியில் இருந்த மூடநம்பிக்கைகள் மட்டிலான வெறுப்பினையும் வெளிப்படுத்துகின்றார். சாதி ஆசாரம் பார்த்து சாதாரண மக்களை துன்புறுத்துவது, மரணச்சடங்கில் அர்த்தமற்று ஆடிக்கொண்டு செல்லுவது, போலி கௌரவங்களுக்காக கொலையும் செய்ய முயலுவது, பெண்களை அடிமைகள் என்ற மனப்பாங்கில் நடத்துவது போன்ற பல விடயங்கள் இவரால் கண்டிக்கப்படுகின்றன. 'தங்கமணி' என்பதும் இவர் எழுதிய நாவலாக கருதப்பட்டாலும் அது பார்ப்பதற்குக் கிடைத்தில்லை.

**சிறுகதைகள்**

இவர் எழுதிய சிறுகதைகளில் 'மரித்தவள் மகள்', 'போலி மோதிரம்', 'போலிப்பிசாசு' போன்றவை குறிப்பிடத்தக்கவை. இச்சிறுகதைகள் நேரடியான கிறிஸ்தவ கதைப்பொருளை கொண்டவையாக அல்லாது நகைச்சுவை ததும்ப பல்வேறு அறக் கருத்துக்களை கூறுவனவாக அமைந்துள்ளன. 'மரணித்தவள் மகள்' சிறுகதையில் இறந்தவளாக கருதி புதைக்கப்பட்ட ஒரு பெண், உண்மையில் இறக்காது மீண்டு வருவதும் கணவன் மனைவிக்கிடையேயான உண்மை அன்பை வலியுறுத்தும் கதையாக அமைந்தது. 'போலிமோதிரம்' ஒரு செல்வந்தப் பெண்ணிடம் பணியாற்றும் கண்மணி என்னும் பெண் அவரது

விலைமதிப்பற்ற மோதிரத்தினை திருடுவதற்கு எடுக்கும் முயற்சி அம்பலமாவதை அடிப்படைக் கதையாக கொண்டு அளவுக்கு மீறி ஆசை கொள்ளக்கூடாது என்ற கருப்பொருளுடன் படைக்கப்பட்டுள்ளது. 'போலிப்பிசாசு', கடவுள் மேல் பக்தியுள்ளவர்கள் எப்போதும் துணிவோடு திகழ்வார்கள் என்ற கருப்பொருளில் அமையும் கதையாகும். அவரது சிறுகதைகள் சிறுகதைகளுக்குரிய கட்டமைப்பினைக் கொண்டிருப்பதுடன் வாசிப்பார்வத்தை தூண்டக்கூடிய வளர்ச்சிப்படிகளையும், வருவதை அவாவும் (Suspense), புதிர் முறைமைகளையும் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி தமிழ் கற்ற ஒருவரின் எழுத்துக்களா என்று சந்தேகம் கொள்ளும் அளவுக்கு சிறப்பான மொழிச்சிறப்பினையும் கொண்டு விளங்குகின்றன.

**நாடகங்கள்**

அவர் எழுதிய நாடகங்களில் 'தனிநாயகம்' அல்லது 'தஞ்சம் அளித்த தாதை' என்ற நாடகமானது இரண்டு அங்கங்களுடனும் ஆறு காட்சிகளுடனும் ஆக்கப்பட்டுள்ளது. இது ஒரு பிரான்சிய கதையினை தழுவி எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஆனால் பாத்திரப் பெயர்கள் முழுவதையும் தமிழ் பெயர்களாக ஆக்கியுள்ளார். எதிரியையும் மன்னிக்கும் மனப் பக்குவத்தை அறிவுரையாக எடுத்துரைக்கின்றார். மன்னிப்பின் மகத்துவத்தினை நாடகம் அழகாகக் கூறுகின்றது.

'நானே குற்றவாளி' என்ற நாடகமானது ஐந்து அங்கங்களைக் கொண்ட நெடுநாடகமாகும். இது ஒரு துப்பறியும் கதையை ஒத்த வகையில் எழுதப்பட்டுள்ளது.'பாவசங்கீர்த்தன இரகசியம்' என்பது எவ்வாறு குருவானவர்களால் காப்பாற்றப்படுகின்றது என்பதும், பாவஅறிக்கை செய்வது கிறிஸ்தவர்களின் கடமை என்பதனையும் வலியுறுத்துகின்ற நாடகமாக இது காணப்படுகின்றது. அடிகளாரிடமிருந்த நாடகப்புலமை இந்நாடகத்தில் சிறப்பாக வெளிப்படுகின்றது.

'அருளும் கறுப்பனும்' என்ற நாடகமானது ஓர் குறு நாடகமாக இரண்டு பாத்திரங்களை மட்டும் கொண்ட நாடகமாகக்

காணப்படுகின்றது. இதுவும் ‘வ.ப.ல.தேயோலியே’ சுவாமியார் எழுதிய ‘லெபதிப் போவர்’ என்ற பிரான்சிய கதையினை தழுவி எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அருள் என்ற சிறுவனுக்கும், கறுப்பன் என்ற வறிய சிறுவனுக்கும் ஏற்படுகின்ற உறவு, கடவுள் நம்பிக்கையற்ற கறுப்பனுக்கு கடவுள் நம்பிக்கையினை ஏற்படுத்துவதாக கதை அமைகின்றது. பகிர்ந்து வாழ்தலின் அவசியத்தினை நாடகம் கொண்டுள்ளது.

அருட்தந்தை டெய்சி அவர்களின் நாடகங்கள் மேற்கத்ததைய நாடகங்களின் தொடக்கம், வளர்ச்சி, உச்சம், முடிவு போன்ற நியம நாடக கட்டமைப்புக்களுடன் ஆக்கப்பட்டுள்ளது. சிறப்பான மொழி நடையைக் கொண்டவை யாகவும், பேசி நடிக்கக்கூடிய செயல் சாத்தியப்பாடுகளைக் கொண்டவையாகவும், மேடைக் குறிப்புக்கள், காட்சிப் பிரிப்புக்கள் என்பவையெல்லாம் சிறப்பாக அமையப் பெற்றவையாக அமைந்திருப்பதுடன் கிறிஸ்தவ விழுமியங்களை, பிரச்சாரப்பாங்கற்று கலைத்துவத்துடன் மிகவும் அழகாக சொல்லுகின்ற நாடகங்களாகவும் அமைந்துள்ளன. ஈழத்தின் கத்தோலிக்க நாடக வரலாற்றில் மாபெரும் பணிகளை ஆற்றிய திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர் நீ.மரியசேவியர் அடிகள், குருமட மாணவனாக இருந்த காலத்தில் அம்பிட்டியா குருமடத்தில் முதன் முதலாக நெறியாள்கை செய்த நாடகம் டெய்சி அடிகளாரின் தனிநாயகம் நாடகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2. **நாடகத்துறையின் வளர்ச்சிக்குப் பணியாற்றிய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்**

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் பாலப்பருவத்தில் இருந்து நாடகத்தோடும் இலக்கிய அறிவோடும் வளர்க்கப் பட்டமையே அவரது பணிவாழ்வின் பல சவால்களை வெல்வதற்கும் சிறந்த மதபோதகராக மிளிர்வதற்கும், சிறப்பு மிக்க நாடகக்கலைக்கு சேவையாற்றவும் முடிந்திருக்கின்றது.

நாடகம் என்பது ஒரு பிரச்சனையை அடிப்படையாகக் கொண்ட கதை ஒன்றினை பாத்திரந் தாங்குதல்களினூ டாக வெளிப்படுத்துகின்ற கலைவடிவம். அரங்கு என்பது நாடகத்தினை செயல் நிலைப்படுத்துகின்ற அனைத்து கலைகளினதும் இயங்கியல் நிலையின் வடிவமாகும். அரங்கச் செயற்பாடுகள் என்பது நாடகத்துடனும், அரங்குடனும் தொடர்புடைய ஆடல் பாடல், வகிபாகமாடல், கதைசொல்லல், விளையாட்டு எனப் பல்வினைப்பாடுள்ள விடயங்களையும் பிரயோக நுட்பமாக பயன்படுத்தும் செயற் தொகுதியாகும். இம் மூன்றுடனும் பாலப்பருவத்தில் இருந்து சுவாமி அவர்களுக்கு தொடர்பிருந்தது. அதனாலேயே அவர் தனது பணிகளில் நாடகத்தினையும் அரங்கையும் பயன்படுத்தியுள்ளார்.

**சிறிய தந்தையிடமிருந்து பெற்ற அரங்க அறிவு**

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் வளர்ப்புத் தந்தையாராகிய தம்பிமுத்துப்பிள்ளை அச்சு வேலியில் பலராலும் அறியப்பெற்ற ஒரு ஆளுமை. அச்சுவேலியில் அச்சியந்திர சாலையை உருவாக்கியவர் ‘சன்மார்க்க முன்னேற்ற சபை’யை உருவாக்கியவர் ‘சன்மார்க்க போதினி’ என்ற பத்திரிகையை நீண்ட காலம் நடத்தி வந்தவர். அதுமட்டுமன்றி எஸ்தாக்கியர் நாடகம், யோசேப்பு ட்றாமா, தூ மரத நாடகம், சந்தியோகுமையோர் சகாயசபா, போன்ற பல நாடகங்களையும் எழுதியவர், நெறிப்படுத்தியவர். பல விலாசங்களையும், கூத்துக்களையும், நாடகங்களையும் தமது அச்சகத்திலே பதிப்பித்தவர். ஒரு கவிஞனாகவும், கலைஞனாகவும் புகழ்பெற்றவர். அவரிடமிருந்த நாடகத்துறை சார்ந்த ஆற்றல்கள் சுவாமி அவர்களிடமும் பிரதிபலித்துள்ளது. வாழ்நாள் முழுவதுமான அவர்களின் பணிகளில் அவரை இயக்கிய முக்கியமான அறிவாக

> அவரது அரங்கியல் அறிவு செயல்பட்டுள்ளது. சிறிய வயதில் தந்தையார் அவர்கள் எழுதிய எஸ்தாக்கியார் நாடகத்தில் எஸ்தாக்கியாரின் மகன்களில் ஒருவராக சுவாமி நடித்துள்ளார். இந்த நாடகம் பல இடங்களில் மேடையேற்றப்பட்டது. குறிப்பாக, யாழ் புகையிரத நிலையக்குழு, யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தபோது சேர் பொன் இராமனாதனின் வேண்டுகோளுக்கிணங்க 1886இல் இந்நாடகத்தின் ஒரு பகுதி யாழ்நகரில் இலவசமாக மேடையேற்றப்பட்டு பலராலும் பாராட்டப்பெற்றது. (நெஞ்சே நினை)

எஸ்தாக்கியார் நாடகம் யாழ்ப்பாணத்திலே மிகவும் பிரபல்யமானதாக மாறியது மட்டுமன்றி சுவாமி ஞானப்பிரகாசரை சிறந்த நடிகனாகவும் இனங்காட்டியது. அதனைக் கவிஞர் அமுது பின்வருமாறு கூறுகின்றார்.

> அந்தப் பேர் பெற்ற நாடகத்தை அரங்கில் விட்டபோது முழு யாழ்ப்பாணமுமே பொங்கி கரைபுரண்டு எழும்பி வழிந்தது போன்ற சனக்கூட்டம் அச்சுவேலியை முற்றுகையிட்டது. ஆடலும் பாடலும் சிறந்து, தென்மோடி கனிந்து, துள்ளலும் எள்ளி இகழ்தலும் மிகுந்து, கர்நாடக பாணிச் சங்கீதம் கலந்து, பின்னணி வரிசை அமைத்து எஸ்தாக்கியார் நாடகம் புதுமை பொலிந்தது. இந்த நாடகத்தில் ஞானப்பிரகாசியார் எஸ்தாக்கியாரின் மூத்த மைந்தனாக நடித்தார் அவருடைய அபூர்வமான நடிப்பை பாராட்டாதவர் இல்லை... ( நெஞ்சே நினை)

நாடகப்பயிற்சி மட்டுமன்றி கலைசார்ந்த பயிற்சிகளையும் சுவாமி அவர்கள் அச்சுவேலியில் பெற்றார். தனது சிறிய தந்தையார் அதனை ஏற்படுத்தி தந்ததனை அவரே கூறியிருப்பது சிறப்பாகும்.

சுவாமி அவர்கள் சிறந்த நடிகனாக மட்டுமன்றி இசைக்கலைஞனாக எழுத்தாளனாக பல்வேறு துறைகளிலும் அவர் பயிற்சி பெற்றது சிறியதந்தையாரிடமிருந்து என்பதனை உறுதிபடக் கூற முடியும். அவர் பெற்ற அரங்கோடு தொடர்புடைய ஆற்றல்கள் அவரது வாழ்நாளில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது என்பதனை இனி நோக்குவோம்

**தர்க்கப் பிரசங்கத்தின் தந்தை**

சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுடைய மறைபோதக நுட்பங்களில் மிகவும் முக்கியமானவை அவரது தர்க்கப் பிரசங்கங்கள். அவை ஒரு ஆற்றுகை வடிவம் என்பதும் அதற்கு அரங்குசார் முக்கியத்துவம் உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. தர்க்கபிரசங்கங்கள் ஆரம்பத்தில் மர நிழல்களில் நடத்தப்பட்டன. மக்கள் கூடி இருக்கும் இடங்களில் பிரதான தர்க்கவியலாளனுடன் இரண்டாமவரும் நிற்பார்கள். பெருமளவில் மக்கள் கூடி இருப்பார்கள். அக்காலத்தில் இருந்த மதவிரோத கருத்துக்களுக்கான தர்க்கங்களாகவே அவை இருந்தன. அங்கு கிறிஸ்தவ விசுவாசத்திற் கெதிரான கருத்தினை இரண்டாமவர் முன்வைப்பார், முதலாமவர் அதற்கான விளக்கங்களை விசுவாசம் சார்ந்து முன் வைப்பது மட்டுமல்ல அதனை ஒரு அளிக்கையாக மேற்கொள்வார். மக்கள் அந்த பதில்களால் உற்சாகம் அடைந்து கைதட்டுவார்கள். எதிராளியாகிய இரண்டாமவர் மேலும் ஒரு வாதத்தினை முன்வைப்பார் அதற்கும் கைதட்டப்படும். எனவே சார்பு நிலையாளிகளும், எதிர் நிலையாளர்களும் அந்தச் சபையிலே இருவேறு கட்சிகளாகி விடுவார்கள். முதலாமவராக சுவாமி ஞானப்பிரகாசரே பிரதான பாத்திரம் ஏற்பார். அதுமட்டுமன்றி இடையில் மத்தளம், வீணை கொண்டு சமயச்சார்பான பாடல்கள், இசையுடன் இசைக்கப்படும். இது வளர்ச்சி பெற்று இரண்டு மேடைகள் அமைத்து மேடையின் மேல் இருவரும் ஏறி நின்று தர்க்கம் புரிவார்கள். ‘கவர்ச்சியான முறையில் கத்தோலிக்கம் அல்லாதோர்க்கு கத்தோலிக்க சமய உண்மைகளை போதிக்கும் நல்ல பயனுள்ளமுறை இந்த தர்க்கப்பிரசங்கம்’ என

ஞானப்பிரகாச சுவாமியாரே கூறி இருக்கின்றார். நாடெங்கும் இருந்து பிற சமயத்தினர் பெருமளவாக இந் நிகழ்வுக்கு வருகை தருவர். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் சமயப்பணி செய்த கத்தோலிக்க வாழ்வு நிலையங்களிலும், மடு போன்ற பொது திருத்தலங்களிலும், கோவில் திருநாட்களுக்கு முன் முதல் மூன்று நாட்களுக்குத் தரக்கப்பிரசங்கங்கள் நடைபெற்றுள்ளன. தூர இடங்களில் இருந்து முதலாக மக்கள் வண்டில் கட்டி வந்து பார்ப்பார்கள்.

தர்க்கப்பிரசங்கத்தின் தந்தையாக கூறப்பட்டிருக்கும் சுவாமி அவர்களின் தர்க்கத்திறனுக்கு முழுமுதற்காரணம் அவரிடம் காணப்பட்ட அரங்கியல் அறிவே. நவீன அரங்குகளிலே சமூக மாற்றத்திற்காக மேற்கொள்ளப்டுகின்ற பிரயோக அரங்கு (Apply Theatre) சார் செயற்பாடுகளில் இத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் ஒன்றாக ‘வாத விவாத அரங்கு’ (Forum Theatre). அமைகின்றது. இதனை லத்தீன் அமெரிக்காவை சேர்ந்த அரங்கவியலாளரான, ஒடுக்கப்பட்டோருக்காக குரல் கொடுத்த அகஸ்தோ போல் உருவாக்கி அதிகமாக பயன்படுத்தினார் . ஆனால் அவருக்கு முன்னமே சுவாமி அதன் சில பண்புகளை உள்ளடக்கி ஈழத்தில் பயன்படுத்தினார் என்பது ஆச்சரியமான விடயமாகும். சபை முன்பாக புதிதளித்தல்களை (Improvisation) மேற்கொள்ளக்கூடிய விடயதானத்தினை கொண்ட தர்க்கிக்கும் ஆற்றல் கொண்ட நடிகனாலேயே இது அதிகம் சாத்தியம் என்பதனை அகஸ்தோபோல் கூறுகின்றார். எனவே சுவாமி அவர்களுக்கு இந்த அறிவை வழங்கியது அரங்கு சார்ந்த அவரது பாலப்பருவத்து அனுபவங்களே என்பது மிகையல்ல.

**அரங்கு சார் நுட்பங்களை பயன்படுத்தியமை**

சுவாமி அவர்களின் போதனைப்பண்பில் அவர் ஒரு சிறந்த ஆசிரியராக மிளிர்ந்தார். கற்பவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய பல செயற்பாடுகளை மேற்கொண்டார் என்பார்கள். விளையாட்டுத்தனமாக நகைச்சுவைகளை தான் சிரிக்காமல் ஏனையோர் விழுந்து விழுந்து சிரிக்கத்தக்கதாக

கூறுதல், விடுகதைகளை கேட்டல், படங்களைக் காட்டிப் போதித்தல் என மகிழ்வித்தலோடு தொடர்புடைய விடயங்களை பயன்படுத்தியுள்ளார். அதுமட்டுமன்றி வினாவிடை முறையினூடக கற்பிக்கும் நுட்பத்தினை அவர் சிறப்பாக கடைப்பிடித்துள்ளார். இன்றைய கால கட்டத்தில் அரங்கச் செயற்பாடுகளில் இவற்றையெல்லாம் குறிப்பிடுகின்றார்கள். எனவே சுவாமிகளின் அரங்குசார் ஆளுமையே இவற்றைச் செய்திருக்கின்றது.

அதுமட்டுமல்ல, அவரை திருமறையின் 'சிம்மக்குரலோன்' என வர்ணிக்கின்றார்கள் அந்தளவுக்கு துணிவுள்ள சிறந்த பேச்சாளராக இருந்தார். அவரது பிரசங்கத்தினை 'மகுடிக்கு கட்டுண்ட பாம்புகள்' போல் மக்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்று கூறப்படுகின்றது. பல்சுவையும் மிகுந்ததாக அவரது அந்தப் பேச்சுவன்மைக்குக் காரணம், அரங்கியல் பரிச்சயமே. எனவே சுவாமி அவர்கள் பெற்றுக்கொண்ட அரங்க அறிவு அவரது போதனையின் துணைகளாக இருந்துள்ளன என்பதனை அறிந்து கொள்ளலாம். அவ்வாறே அவர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் இரசனைமிக்கதாக இருக்கும் என்கின்றனர். நவரசங்களும் கலந்த அவரது கற்பித்தல் செயற்பாடுகள், மேடைப்பேச்சுக்கள், இலக்கிய எழுத்துக்கள் அனைத்திலும் அவரது அரங்கப் பாதிப்பினை உணரமுடியும்.

**நாடகக்கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்கள்**

ஈழத்தின் நாடகக்கூத்துக் கலையானது கத்தோலிக்கர்களினால் வளர்க்கப்பட்டது என்பது பலரதும் கருத்தாகும். அத்தகையை கருத்து நிலைகளுக்கு காரணமானவர் சுவாமி ஞானப்பிரகாசரே. அவர் பல்வேறு தளங்களில் நாடகக்கலையின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார்.

சுவாமி அவர்களுடைய காலத்திலேயே அதிகமான நாட்டுக்கூத்து, விலாச நாடக நூல்கள் யாழ்ப்பாணத்திலே எழுதப்பட்டுள்ளது. அக்காலத்தில் நாடகங்கள் எழுதப்

படுவதனை சுவாமி அவர்கள் ஊக்கப்படுத்தியது மட்டுமன்றி அதனை பார்வையிட்டு, திருத்தங்கள் செய்து அவற்றினை மேடையேற்றுவதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளார். அச்சிடும் அனுமதியை அக்காலத்தில் Imprimatur என அழைத்தனர். அந்த அனுமதியை ஆயர்கள் அல்லது ஆயர்களின் பிரதிநிதிகள் வழங்கினர். கிறிஸ்தவ நாடகங்களை பார்வையிட்டு அனுமதிப்பதற்கான அதிகாரத்தினை அக்கால ஆயர்கள் அவரிடமே வழங்கி இருக்கவேண்டும். அவரிடமிருந்த தமிழறிவு கலையறிவு சார்ந்து அந்த அனுமதி வழங்கப் பெற்றிருக்கலாம்.

அது மட்டுமன்றி அக்காலத்தில் ஆலயத் திருவிழாக்களில் புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றினைக் கொண்ட பல நாடகங்கள், கூத்துக்கள் போன்றவை மேடையேற்றப்பட்டுள்ளன. அவற்றினை மேடையேற்றுவதில் சுவாமி அதிக அக்கறை எடுத்துள்ளார். நாடக மன்றங்களை ஊக்குவித்திருக்கின்றார். அருட்திரு பாவிலுப்பிள்ளை அ.ம.தி, அவர்கள் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் கலைப் பணியைப் பற்றிக் குறிப்பிடும் போது;

> ஞானம் சுவாமியார் ஒவ்வொரு கோவில் திரு நாளிலும் எப்படியாவது ஒரு நாட்டுக் கூத்தைப் போடுவார். இரவிரவாக ஆடப்படும். இரவிரவாக விழித்திருந்து சுவைத்துக் கொண்டிருப்பர். இந்நாடகங்களுக்கிடையே எழுந்து நின்று ஞானம் பெரியதொரு பிரசங்கத் தினையே ஆற்றிவிடுவார். அப் புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கியும் நாடகத்தில் வருகின்ற காட்சி அமைப்புக்களை எடுத்துக் கூறியும் மக்களுக்கு எளிதாகப் புரிய வைப்பார் எனக் கூறுகின்றார் (மறைப்பணி புரிந்த மாமேதை).

இக்கூற்றில் இருந்து அவர் எந்தளவுக்கு மானசீகமாக நாடகத்தினை நேசித்து அது மேடையேற்றப்படுவதற்கு துணை நின்றார் என்பது புரியும்.

மின்சார வசதிகள் இல்லாத அக்காலத்தில் திருவிழாக்காலங்களில் திருவிழாவுக்கு முதல் நாள் வேஸ்பர் (நற்கருணை ஆராதனை) சடங்கினை தொடர்ந்து மக்கள் ஆலயங்களிலேயே தங்கி நின்று அடுத்த நாள் காலை திருவிழாத் திருப்பலியையும் கண்டுதான் வீடுகளுக்குச் செல்வார்கள். இதனால் மக்கள் ஆலயத்திலே தரிக்கின்ற இரவிலே நாடகங்கள் கூத்துக்கள் மேடையேற்றப்பட்டன. அவற்றினை சுவாமி அவர்கள் ஊக்குவித்தார்கள். அவைபற்றி அவர் எழுதிய நாட்குறிப்பிலே பல தகவல்கள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட ஆலயத்தில் நாடகம் நிகழ்த்தப்பட்டதனையும் அவற்றின் சிறப்பினையும் சில வரிகளில் குறிப்பிடுகின்றார். நீர்வேலி, முகமாலை, சாவகச்சேரி, மானிப்பாய், உரும்பிராய் போன்ற பல இடங்களில் நடைபெற்ற நாடகங்கள் பற்றி சுவாமிகள் தனது நாட்குறிப்பில் குறிப்பிடுகின்றார்.

இவை தவிரவும் சுவாமி அவர்கள் இரண்டு தமிழ் நாடகங்களையும் ஒரு ஆங்கில நாடகத்தையும் எழுதியிருக்கின்றார் என்றும் அவைகள் மறைந்து போயின என்றும், சுவாமி அவர்கள் கிறிஸ்தவ நாடகங்களை ஊக்குவித்தும், நாடக மன்றங்களை உருவாக்கியும், கலைகளை வளர்த்திருக்கின்றார் என்பதனையும், ஆலயத் திருநாள்களின் போது புனிதர்களின் வாழ்க்கை வரலாற்று நாட்டுக் கூத்துக்களையும், தவக்காலத்தில் பாஸ்கு நாடகங்களையும் திருப்பாடுகளின் காட்சிகளையும் மேடையேற்றிக் கலைகள் வளர அரும்பணி புரிந்திருக்கின்றார் என்றும், கலைவழி இறைபணி நற்செய்திப்பணி ஆற்றி இருக்கின்றார் எனவும் முதலியார் குலசபாநாதன் குறிப்பிடுகின்றார்.

**திருப்பாடுகளின் நாடகங்கள்**

கூத்துக்கள் நாடகங்கள் மட்டுமன்றி அக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட திருப்பாடுகளின் காட்சிகளையும் சுவாமிகள் ஊக்குவித்துள்ளார். அவரது காலத்தில் 'உடக்குப்பாஸ்' என்ற பெயரில் பொம்மைகளைக் கொண்டே பாடுகளின் காட்சிகள் நிகழ்த்தப்பெற்றன. அதற்குப் பின்னணியாக பசாம் எனப்படுகின்ற வியாகுலபிரசங்கம் இசைக்கப்பெறும். நிறைவிலே 'பிழை தீர்க்கும் மந்திரம்', ஒப்பாரிப் பாடல்கள் போன்றவை பாடப்படும். அப்பாடல்களை சுவாமியவர்கள் தானே பாடக்கூடியவராக இருந்தார். சில ஆலயங்களில் தான் பாடியதாக நாட்குறிப்பிலே கூறியுள்ளார்.

திருப்பாடுகளின் காட்சிகள் தொடர்பாக அவர் எந்தளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றார் என்பதற்கு திருநெல்வேலியில் நடைபெற்ற திருப்பாடுகளின் காட்சி நிகழ்வில் அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் நோக்கத்தக்கது. "One Passion Show makes more devotional impact than thousand sermons and retreats" ஆயிரம் பிரசங்கங்களையும் ஞான ஒடுக்கங்களையும் விட ஒரு திருப்பாடுகளின் காட்சி மிகந்த பக்தி நிலையை ஏற்படுத்தக் கூடியது. என்கிறார்கள். (நெஞ்சே நினை) இக்கருத்தில் இருந்து அவர் நாடகக் கலையை எந்தளவுக்கு உயர்வாக மதித்தார் என்பது புலப்படுத்தப்படுகின்றது.

3. **திருப்பாடுகளின் நாடக மரபினை அறிமுகம் செய்த அருட்திரு ரி. எம். எவ். லோங் அடிகள்.**

*1896* ஆம் ஆண்டு சித்திரை மாதம் *22*ம் திகதி தேவ பக்திமிக்க பெற்றோர்களுக்கு அயர்லாந்தில் பிறந்து வளர்ந்த அருட்தந்தை ரி.எம்.எவ் லோங் அடிகள், குருத்துவத்திற்குத் தன்னை அர்ப்பணித்தார் சிறிய வயதில் இருந்தே விளையாட்டுத் துறையிலும், சங்கீதம், நாடகம் போன்றவற்றிலும் ஆர்வங் கொண்டிருந்த அடிகளார். சிறிய வயதிலேயே சிறந்த தலைமைத்துவப் பண்புகளை தன்னகத்தே கொண்டிருந்தார். *1921* ஆம் ஆண்டு இலங்கைக்கு அழைப்புப்

பெற்று அருட்திரு மத்தியூஸ், அருட்திரு யோண் ஹைமர், ஆகியோருடன் இலங்கை வந்தடைந்தார். யாழ்ப்பாணத்தில் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆங்கிலம், இலத்தீன், சரித்திரம், சமயம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். மிகச்சிறந்த கண்டிப்பும் கண்ணியமும் மிக்க ஆசிரியராக திகழ்ந்ததுடன் விளையாட்டுதுறையில் கல்லூரி உயர்வதற்கும் அரும்பாடுபட்டு உழைத்தார். 1933 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தில் தனது முதுமாணிப் பட்டப்படிப்பினை நிறைவு செய்து கொண்டு மீண்டும் இலங்கைக்கு வந்த போது 1936 ஆம் ஆண்டு புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்றார். தொடர்ந்து 18 ஆண்டுகள் அதிபராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் கல்வியில் மிகவும் சிறப்புற்றனவாக புரட்ஸ்தாந்து மிஷனரிகளின் பாடசாலைகள் திகழ்ந்தன. அவற்றிற்குச் சமாந்தரமாக எழுந்த கத்தோலிக்க பாடசாலையாகிய பத்திரிசியார் கல்லூரியை ஏனைய மிஷனரி பாடசாலைகளுக்கு இப்பாடசாலை கொஞ்சமும் குறைந்தது அல்ல என்பதை முழக்கமிட்டுச் சொல்லக் கூடிய தரத்துக்கு முன்னேற்றியவர் லோங் அடிகளே என்பது மிகையல்ல. கல்வியிலும் பல்வேறு விளையாட்டுக்களிலும், ஒழுக்கத்திலும் பாடசலையை முன் கொண்டு செல்வதற்கு அடிகளார் பாடுபட்டார். அவரது காலம், பத்திரிசியார் கல்லூரி வரலாற்றின் பொற்காலம் என்றே இன்றுவரைப் பேசப்படுகின்றது. சிறுவர் உரிமைப் பிரகடனங்களுக்குப் பல காலம் முன்னமே பிரம்படித் தண்டனை தவறு என்று அதனை நிறுத்தியவர் லோங் அடிகளே. அவரது நிர்வாக ஆளுமையை பலரும் முன்னுரைப்பார்கள். ஆனால் அவர் கலை வளர்ச்சியில் ஆற்றிய பங்களிப்பையே இக்கட்டுரை பேசுகின்றது.

**கல்லூரியில் ஆங்கில நாடகங்கள்**

புனித பத்திரிசியார் கல்லூரியில் லோங் அடிகள் ஆசிரியராக இருந்த போதே ஆங்கில நாடகங்களை பயிற்றுவித்து மேடையேற்றத் தொடங்கினார். 1950

ஆம் ஆண்டு கல்லூரிக்கென ஒரு நாடக மன்றத்தினை உருவாக்கி (Dramatic Society) தொடர்ச்சியாக நாடகங்கள் மேற் கொள்ளப்படுவதற்குத் தூண்டினார். அதுமட்டுமன்றி இல்லங்களுக்கிடையே நாடகப்போட்டிகளை அறிமுகப்படுத்தி நாடகங்கள் மேடையேறுவதை தூண்டினார். அவரது தூண்டுதலால் *1951*ஆம் ஆண்டு மட்டும் எட்டு நாடகங்கள் பாடசாலையில் மேடையேறியதாக ஆசிரியர் ஆம்ஸ்ரோங் அவர்கள் குறிப்பிடுகின்றார். அவை அனைத்துமே நல்ல வரவேற்பைப் பெற்றன எனவும் குறிப்பிடுகின்றார்.

> "*1951 ஆம் ஆண்டின் பரிசளிப்பு விழாவிற்காக 'தி சைனீஸ் பஸில்'* (The Chinese Puzzle) *நாடகம் மேடையேற்றப்பட்டது. கத்தோலிக்க கழகத்தின்* (Catholic Club) *நிதி உதவிக்காக 'தி பிஸப்ஸ் கேண்டில்ஸ்டிக்ஸ்"* (The Bishop's Candlesticks) *தயாரித்து வழங்கப்பட்டது. மத்யூஸ் இல்ல ஜூபிலி கொண்டாட்டங்களில் மத்யூஸ் இல்ல இசை நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக 'தி டியர் டிபார்ட்டட்"* (The Dear Departed) *நாடகம் அமைந்தது. இல்லங்களுக்கு இடையிலான போட்டியில்* (Inter-House competition) *நான்கு இல்லங்களும் நான்கு நாடகங்களை மேடையேற்றின. மத்யூஸ் இல்லம்* (Matthews House)*: 'மாமாமுச்சி'* (Mamamouchie) *மற்றும் 'தி மர்டர் ஆஃப் பேட்ரிக் கேன்'* (The Murder of Patrick Cane) *நாடகங்களை மேடையேற்றி முதலிடம் பிடித்தது. டான் இல்லம்* (Dunne House)*: 'தி செனேட்டர் த்ரோஸ் ஏ பார்ட்டி"* (The Senator Throws a Party) *நாடகத்துடன் தொடர்ந்து வந்தது. பொன்ஜீன் இல்லம்* (Bonjean House)*: 'ரிஹர்சல்'* (Rehearsal) *நாடகத்தை மேடையேற்றியது. ஆபிரகாம் இல்லம்* (Abraham House)*: ஒரு பிரான்சிய நடனத்தையும், 'ஏ டொமஸ்டிக் குவாரல்'* (A Domestic Quarrel) *நாடகத்தையும் வழங்கியது."*

எனத் தனது கட்டுரையிலே குறிப்பிடுகின்றார். அதுமட்டுமன்றி அக்டோபர் 24, 1952 அன்று பரிசளிப்பு விழாவில் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட 'தி அப்ஸ்டார்ட்' (The Upstart) நாடகமே இந்த ஆண்டின் சிறந்த நாடகமாகும். என்றும் குறிப்பிடுகின்றார்.

எனவே பாடசாலையில் ஆங்கில நாடகங்களை வினைத்திறனுடன் மேடையேற்றுகின்ற ஒரு பாரம்பரியத்திற்கு வித்திட்டவர் லோங் அடிகளே. அவரது பணிக்கு ஆசிரியர் ஆம்ஸ்ரோங் அவர்கள் மிகவும் பக்கபலமாக இருந்துள்ளார் என்பதனையும், நாடகங்களுக்கான வேட உடைகளை வடிவமைத்துக் கொடுப்பதில் திருக்குடும்ப கன்னியர் மட சகோதரிகள் உதவியுள்ளனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

**திருப்பாடுகளின் நாடகம்**

இலங்கையில் பாஸ்கு காலத்தில் இயேசுவின் பாடுகள் மரணத்தினை சித்திரிக்கும் திருப்பாடுகளின் ஆற்றுகைகளாக 'உடக்குப்பாஸ்' என அழைக்கப்பட்ட பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்படும் பாரம்பரியமொன்று காணப்பட்டது. அது யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகளின் காலத்திலேயே அறிமுகமாகியது என்றும் கூறுவர். அது யாழ்ப்பாணம், மன்னார், வன்னி மாவட்டங்கள் போன்ற எல்லா இடங்களிலும் நிகழ்த்தப்பட்டன. அது அதிக நிதிச்செலவுகளையும், மனித பிரயத்தனங்களையும் கொண்டு நிகழ்த்தப்பட்டன. அதனால் பல பங்குகளில் மக்களின் ஒற்றுமையின்மை, பக்திநிலையற்ற தன்மைகள் போன்றவற்றினால் பாஸ்காகால மனநிலைகள் குழம்புவதனைக் கண்ட யாழ் மறைமாவட்ட ஆயர் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை அவர்கள், அதனை பேசாலை போன்ற ஓரிரு இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் மேடையேற்றுவதற்குத் தடைசெய்தார்.

ஆனால் மனிதர்கள் நடிக்கின்ற திருப்பாடுகளின் நாடகமரபானது ஐரோப்பாவிலே காணப்பட்டது. குறிப்பாக ஜேர்மனியிலுள்ள 'ஒப்பரகாமு' என்ற இடத்தில் மிகப்பிரமாண்டமாக நிகழ்த்தப்பட்டு வந்தது. தென்

இலங்கையிலும் 'பொறலச' என்ற இடத்தில் அறிமுகமாகி சிங்கள மக்களால் மேடையேற்றப்பட்டிருந்தது. வடபகுதியில் எங்கும் மனிதர்கள் நடிக்கின்ற நாடக மரபே இருக்கவில்லை காரணம் இயேசுவை மனிதர்கள் பாத்திரந்தாங்குவதனை மக்கள் என்றும் எற்றுக் கொள்ளவில்லை. அம்மரபினை லோங் அடிகள் அறிமுகம் செய்தார். அவர் அமெரிக்கா சென்று மீளும் போது அங்கு கிடைத்த ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நாடகப்பிரதியை இங்கு கொண்டு வந்து மேடையேற்ற முனைந்தார். ஆனால் அவருக்கு அதிக எதிர்ப்பு கிளம்பியது. ஆயர் எமிலியானுஸ் பிள்ளை முதலில் அதனை வரவேற்கவில்லை. அவருடன் வாதிட்டு அனுமதியைப் பெற்றார். பின்னர் அதனைப் பாடசாலையில் மேடையேற்றுவதற்கு பாடசாலைச் சமூகம் பாரிய எதிர்ப்பினை வெளியிட்டது. அவரது நாடக முயற்சிகளுக்குப் பக்கபலமாக நின்ற ஆசிரியர் ஆம்ஸ்ரோங் அவர்களே முதலில் வரவேற்கவில்லை. இதுபற்றி ஆசிரியர் ஆம்ஸ்ரோங் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

> 'ஆனால் அதைச் செய்தே ஆக வேண்டும் என்பதில் ஃபாதர் லாங் (Fr. Long) உறுதியாக இருந்தார். அமெரிக்காவிற்குச் சென்று திரும்பியபோது, அவர் 'பஃப்பலோ'' (Buffalo) நகரிலிருந்து பாடுகளின் நாடகத்தின் ஒரு கைப்பிரதியை (script) கொண்டு வந்தார். அது மிகவும் எளிமையாகவும், நற்செய்தி நூல்களை (Gospels) மிக நெருக்கமாகப் பின்பற்றுவதாகவும் இருந்தது. கட்டுரையாளராகிய நான், முதலில் பாடுகளின் நாடகம் என்ற யோசனைக்கு மிகவும் எதிர்ப்பாகவே இருந்தேன். ஒரு மனிதன் கிறிஸ்துவாக நடிப்பதை நினைத்து அஞ்சும் யாழ்ப்பாணத்து பய உணர்வே என்னையும் ஆட்கொண்டிருந்தது... ...கிறிஸ்துவின் வேடத்தில் ஒரு மனிதன் நடிப்பதை ஏற்றுக்கொள்வதில் எங்களுக்கும் தயக்கம் இருந்தது. ஃபாதர் லாங் (Fr. Long) தனது கருத்துக்களுக்கு எங்களைச் சம்மதிக்க வைக்க நீண்ட காலம் எடுத்தது...''(The Patrician 1958-1959)